
# 17 அக்டோபர் 2023 - தினசரி நடப்பு விவகாரங்கள்

| | |
|---|---|
| **ஆண்டின் உலக தடகள வீரர்' விருது**<br> | **செய்தி:**<br>**நீரஜ் சோப்ரா** 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்களுக்கான 'ஆண்டின் சிறந்த தடகள வீரர்' விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட 11 பேரில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.<br><br>**முக்கிய குறிப்புகள்:**<br>• ஈட்டி எறிதலில் உலக மற்றும் ஒலிம்பிக் சாம்பியன் ஆவார் .<br>• **ஆண்டின் சிறந்த தடகள வீரர்'** விருதை வென்றவர்கள் **டிசம்பர்** 11 ஆம் தேதி உலக தடகளத்தின் சமூக ஊடக தளங்களில் அறிவிக்கப்படுவார்கள். |
| **2028 ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட் விளையாட்டு சேர்க்கப்பட்டுள்ளது .** | **செய்தி:**<br>• **2028 ஒலிம்பிக்கில் கிரிக்கெட் இடம்பெற உள்ளது.**<br><br>**முக்கிய குறிப்புகள்:**<br>• 2028 ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட்டை சேர்க்க சர்வதேச ஒலிம்பிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது<br>• இது டி20 வடிவில் ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபிரிவில் நடைபெறுகிறது .<br><br>**உங்களுக்கு தெரியுமா ?**<br>• கலப்பு வில்வித்தை பிரிவு 2028 ஒலிம்பிக் போட்டிகளில் சேர்க்கபடவில்லை .<br>• 2028 ஒலிம்பிக் போட்டிகள் லாஸ் ஏஞ்சல்ஸில் நடக்க உள்ளது .<br>• 2028 கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுகள் XXXIV ஒலிம்பியாட் என அதிகாரப்பூர்வமாக அறியப்படுகிறது. |
| **இந்தியாவின் 1வது CAR-T செல் சிகிச்சைக்கு CDSCO அங்கீகாரம் கிடைத்துள்ளது**<br><br>**CDSCO- Central Drugs Standard Control Organization.** | **செய்தி:**<br>• **ImmunoACT உருவாக்கிய இந்தியாவின் முதல் CAR-T செல் சிகிச்சைக்கு CDSCO அங்கீகாரம் கிடைத்துள்ளது.** |

| | |
|---|---|
| | **உனக்கு தெரியுமா?**<br><br>• மும்பையைச் சேர்ந்த இம்யூனோடாப்டிவ் செல் தெரபி பிரைவேட் லிமிடெட்(Immunoadoptive Cell Therapy Private Limited) (ImmunoACT ) **இந்தியாவின் முதல் சிமெரிக் ஆன்டிஜென் ரிசெப்டர் டி-செல் ( CAR - T செல் ) சிகிச்சைக்கான** மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பிடம் (CDSCO) அனுமதியைப் பெற்றுள்ளது.<br>• NexCAR19 என அழைக்கப்படும் இந்த சிகிச்சை சிடி19-ஐ(CD-19) இலக்காகக் கொண்ட CAR- T செல் சிகிச்சை தயாரிப்பாகும். இது மீண்டும் ஏற்படும் மற்றும் எதற்கும் வளைந்து கொடுக்காத B- செல் லிம்போமாக்கள் மற்றும் லுகேமியாவை சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது. |

To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App





CAR T-cell therapy is a type of treatment in which a patient's T cells are genetically engineered in the laboratory so they will bind to specific proteins (antigens) on cancer cells and kill them. (1) A patient's T cells are removed from their blood. Then, (2) the gene for a special receptor called a chimeric antigen receptor (CAR) is inserted into the T cells in the laboratory. The gene encodes the engineered CAR protein that is expressed on the surface of the patient's T cells, creating a CAR T cell. (3) Millions of CAR T cells are grown in the laboratory. (4) They are then given to the patient by intravenous infusion. (5) The CAR T cells bind to antigens on the cancer cells and kill them.

cancer.gov


| | |
|---|---|
| CAR - T செல் சிகிச்சை | CAR - T செல் சிகிச்சை: |

| | |
|---|---|
| | • CAR-T செல் சிகிச்சை என்பது சிமெரிக் ஆன்டிஜென் ரிசெப்டர் T செல் சிகிச்சையை குறிக்கிறது.<br><br>• இது ஒரு வகை புற்றுநோய் நோயெதிர்ப்பு சிகிச்சையாகும்.இது நோயாளியின் சொந்த T செல்களின் திறனை மேம்படுத்த ஆய்வகத்தில் அதனின் மரபணு மாற்றப்படுகிறது பின்பு இதனை நோயாளி உடலில் செலுத்தி அங்கு உள்ள புற்றுநோய் செல்களை இது கண்டறிந்து அதனை அழிக்கும் திறனை கொண்டது .<br><br>**உங்களுக்கு தெரியுமா ?**<br>• குறிப்பாக புற்றுநோய்க்கு மற்ற சிகிச்சைகள் பயனற்றதாக இருக்கும் போது. இந்த CAR-T செல் சிகிச்சை பயனுள்ளதாக இருக்கும். |
| **சுத்தமான எரிசக்தி திட்டங்களுக்கு 7 பில்லியன் டாலர்களை அமெரிக்கா அதிபர் பைடன் வழங்குகிறார்** | **செய்தி**:<br>• பைடன் நிர்வாகம் தூய்மையான எரிசக்தி திட்டங்களைத் தொடங்க 7 பில்லியன் டாலர் இத்திட்டத்திற்கு வழங்குகிறது.<br><br>**முக்கிய குறிப்புகள்:**<br>• ஹைட்ரஜன் எரிபொருளின் வளர்ச்சி மற்றும் உற்பத்தியில் முதலீடு செய்தல்.<br><br>• புதைபடிவ எரிபொருட்களை மாற்றுவதற்கு ஏழு பிராந்திய ஹைட்ரஜன் மையங்களை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.<br><br>• வலுவான தூய்மையான எரிசக்தி பொருளாதாரம் பற்றிய அதிபரின் தொலைநோக்குப் பார்வையை அடைவதையும் 2050 ஆண்டுக்குள் அமெரிக்காவில் பசுமை குடில் வாயு உமிழ்வை பூஜ்ஜியமாகக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **ஆபரேஷன் அஜய்** | **ஆபரேஷன் அஜய்(அஜய் நடவடிக்கை )**<br><br>• ஆபரேஷன் அஜய்((**அஜய் நடவடிக்கை** ) என்பது இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட திட்டமாகும். |

| | |
|---|---|
| | • காஸாவில் ஹமாஸ் குழுவுடன் நடந்து வரும் மோதலின் போது இஸ்ரேலில் இருந்து இந்திய குடிமக்களை வெளியேற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **ஒன்பதாவது ஜி-20 நாடாளுமன்ற அவை தலைவர் உச்சிமாநாடு (பி-20)** | **செய்தி:**<br>• **ஒன்பதாவது ஜி-20 நாடாளுமன்ற அவை தலைவர்கள் உச்சி மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது.**<br><br>**முக்கிய குறிப்புகள்:**<br>• புது டெல்லி துவாரகா பகுதியில் உள்ள யஷோபூமி மாநாட்டு மையத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.<br>• பி-20 பாரதத்தில் கூட்டுப் பிரகடனத்தை ஒருமனதாக ஏற்றுக்கொண்டது. வசுதைவ குடும்பத்தின்(ஒரு பூமி, ஒரு குடும்பம் மற்றும் ஒரு எதிர்காலம் ) உணர்வை எடுத்துக்காட்டுகிறது. |
| **சிக்கிமின் மூன்று முக்கிய இனக்குழுக்கள்: லெப்சாஸ், பூட்டியா மற்றும் நேபாளீஸ்**<br><br> | **செய்தி:**<br>• லெப்சாக்கள், பூட்டியா மற்றும் நேபாளர்கள் சிக்கிமின் 3 முக்கிய இனக்குழுக்கள் ஆவர்.<br><br>**மற்ற முக்கிய குறிப்புகள்:**<br>• சிக்கிம் மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் ரங்க்போ மற்றும் சிங்டம் பகுதிகள் பாதிக்கப்பட்டன.<br>• தெற்கு லோனாக் பனிப்பாறை ஏரி தகர்ந்ததால் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. |

| | |
|---|---|
| **வர்த்தகம் செய்யக்கூடிய பசுமைக் கடனை மத்திய அரசு வெளியிட்டது**<br><br>IN FOCUS<br>Areas which will be part of the credit system<br>■ Tree plantation<br>■ Water<br>■ Sustainable agriculture<br>■ Waste management<br>■ Air pollution reduction<br>■ Mangrove conservation and restoration<br>■ Ecomark<br>■ Sustainable building and infrastructure | **செய்தி:**<br>• இந்திய அரசு சிறப்புத் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தியது. **இந்த திட்டம் ஒரு தனிநபர் அல்லது நிறுவனம், பசுமைக் கடன் பெறவும் அதை ஒரு பிரத்யேக பரிமாற்றத்தில் வர்த்தகம் செய்யவும் அனுமதிக்கிறது.**<br><br>**முக்கிய குறிப்புகள்:**<br>• பசுமைக் கடன் என்பது சுற்றுச்சூழலில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் குறிப்பிட்ட செயல்களுக்காக வழங்கப்படும் ஒரு ஊக்கத்தொகையாகும்.<br>• பசுமை கடன் திட்டம் பல்வேறு தரப்பினரின் சுற்றுச்சூழல் நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது.<br>• இந்தத் திட்டம் 'LiFE'-(சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை) பிரச்சாரத்தின் தொடர் நடவடிக்கையாகும்.<br><br>**உங்களுக்கு தெரியுமா ?**<br>• பசுமைக் கடன் திட்டம் எட்டு வகையான நடவடிக்கைகளை உள்ளடக்கும்: மரக்கன்றுகள் நடுதல், நீர் மேலாண்மை, நிலையான விவசாயம், கழிவு மேலாண்மை, காற்று மாசுபாட்டைக் குறைத்தல், சதுப்புநில பாதுகாப்பு மற்றும் மறுசீரமைத்தல்.<br>• எரிசக்தி சேமிப்புச் சட்டம் 2001ன் கீழ் 2023ஆம் ஆண்டிற்கான கார்பன் கடன் வர்த்தகத் திட்டத்தின் கீழ் இருக்கும் பசுமைக் கடன் திட்டம் தற்சார்பு திட்டமாக உள்ளது. |
| **அதிவேகக் கப்பல் - செரியபாணி** | **செய்தி:**<br>• நாகப்பட்டினம் மற்றும் காங்கேசன்துறை இடையே பயணிகள் படகு சேவையை இந்திய பிரதமர் தொடங்கி வைத்தார்.<br>• இலங்கைக்கான படகு சேவை 40 ஆண்டுகளுக்குப் பிறகு இயக்கப்படுகிறது.<br><br>**முக்கிய குறிப்புகள்:** |

To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App



- செரியபாணி → இந்தியா மற்றும் இலங்கை இடையே அதிவேக பயணிகள் படகு சேவை.
- நாகப்பட்டினம் → தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ளது.
- காங்கேசன்துறை → இலங்கையின் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது.






**சிக்கிமின் சுங்தாங் அணை**




**செய்தி:**

- **சிக்கிம் மாநிலம் சுங்க்தாங் அணை வெள்ளத்தால் இடிந்து விழுந்ததால் செய்திகளில் இடம் பெற்றிருந்தது.**

**முக்கிய குறிப்புகள்:**

- சுங்தாங் அணை டீஸ்டா ஆற்றின் மீது அமைந்துள்ளது.
- இந்தியாவின் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்கள் மற்றும் பூட்டானுக்கு பயனளிக்கும் நீர்மின் திட்டங்களைக் கொண்டிருந்தது.

**2024 ஒலிம்பிக்: பாரிஸ்**
**2028 ஒலிம்பிக்: லாஸ் ஏஞ்சல்ஸ்**
**2032 ஒலிம்பிக்: பிரிஸ்பேன்**

**செய்தி:**

- 2036 ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான இந்தியாவின் முயற்சியை இந்திய பிரதமர் உறுதிப்படுத்தியுள்ளார்.

| | |
|---|---|
| **2036 ஒலிம்பிக்: இந்தியா?** | • இந்த போட்டியை நடத்தும் நான்காவது ஆசிய நாடாக இந்தியா மாறும்.<br><br>**உங்களுக்கு தெரியுமா ?**<br>• 2036 ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான ஆரம்பகட்ட பணிகள் தொடங்குகின்றன. அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் 2024 ஆம் ஆண்டில் பாரிஸில் நடைபெற உள்ளன அதைத் தொடர்ந்து 2028 இல் லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் 2032 இல் பிரிஸ்பேனில் நடைபெறவுள்ளது . |
| **தெருவோர வியாபாரிகளுக்கான திட்டம்: பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகளின் ஆத்மநிர்பர் நிதி (PM SVANidhi)** | **முக்கிய குறிப்புகள்:**<br>• தெரு வியாபாரிகள் (வாழ்க்கை ஆதாரம் பாதுகாத்தல் மற்றும் தெரு வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 2014 ஐ ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நிறைவேற்றியது.<br>.<br>• தற்போதைய தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி 2020 ஜூன் மாதத்தில் பிரதம மந்திரி SVANIdhi திட்டத்தை அறிமுகப்படுத்தியது.<br><br>**பிரதம மந்திரி SVANIdhi திட்டம்:**<br>• **ஆத்மநிர்பர் பாரத் அபியானின் ஒரு பகுதியாக** இந்திய அரசின் இந்த முன்முயற்சி தொடங்கப்பட்டது.<br>• பயனாளிகள்: தெருவோர வியாபாரிகள்.<br>• நோக்கம் - கோவிட்-19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள **தெரு வியாபாரிகளுக்கு மலிவு விலையில் மூலதனக் கடன்களை வழங்குவதே** இதன் நோக்கம்.<br>• தெருவோர வியாபாரிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் தொடங்க நிதியுதவி வழங்குவது மற்றும் அவர்கள் தன்னம்பிக்கை அடைய உதவுவதை குறிக்கோளாக கொண்டுள்ளது.<br>• இந்தத் திட்டம் ஒரு வருட காலத்திற்கு 10,000 ரூபாய் வரையிலான மூலதனக் கடன்களை பிணையமில்லாத இல்லாமல் வழங்குகிறது. தெரு வியாபாரிகள் ஆண்டுக்கு 7% வட்டி |

| | |
|---|---|
| | மானியம் பெறலாம்.<br>.<br>• கடனை சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.<br><br>**உங்களுக்கு தெரியுமா ?**<br>• 2024 டிசம்பர் மாதத்திற்குள் 42 லட்சம் தெரு வியாபாரிகளுக்கு பிரதம மந்திரியின் SVANIdhi திட்டத்தின் கீழ் சலுகைகள் வழங்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.<br>• இந்தத் திட்டம் இந்தியாவில் தெரு விற்பனைத் துறைக்கு ஊக்கத்தை அளிக்கும் என்றும் கோவிட்-19 தொற்றுநோயால் ஏற்படும் பொருளாதார பிரச்சனைகளை தெரு வியாபாரிகள் சமாளிக்க உதவும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. |

***பதிப்புரிமை © Adda247***

*அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் Adda247 இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுக்கும் அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.*